## சின்னஞ்சிறு விளம்பரம்

### கலண்டர் நாட்குறிப்பு

ஆனந்த பஞ்சாங்கக் கலண்டர் 1992 இரகுநாதஐயர் வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புகளின்படி எல்லா விடயங்களும் அடங்கியது: விலை ரூபா 36/- ஆனந்தா நாட்குறிப்பு பெரிய அளவில் இரண்டு நாட்களுக்கு ஒரு பக்கம். ரூபா 80/-. இப்பொழுது விற்பனையாகிறது. எங்கும் கிடைக்கும்: வெளியீடு: ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(சி/1224)

### காணவில்லை

ஒரு வயது நிரம்பிய வெள்ளை, மண் நிறம் சேர்ந்த பொமனேரியன் நாய்க்குட்டி கடந்த 24-12-1991 தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள் இல. 334. பலாலி வீதி, ... கோவில் வீதி என்ற முகவரிக்கு அறியத் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(19185)

### 1 கொழும்பில் நேபாள தூதரகம்

கொழும்பு, டிச. 26
கொழும்பில் நேபாள நாட்டின் தூதரகம் ஒன்றைத் திறக்க இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது. அமைச்சர் ரணில் விக்ரமசிங்கா இத்தகவலை நேற்றுமுன்தினம் தெரிவித்தார். (த)

## New Master Institute

யாழ்ப்பாணம்.

PURE, APPLIED MATHS

### A/L (92 *Aug.*)

ஆரம்பம்: 28 - 12 - 1991

சனி
12-00 — 1-30 - வட்டம்
01-30 — 3-00 - ஆப்பு

ஞாயிறு
12-00 — 1-30 - வலையீட்டின் பிரயோகம்
01-30 — 3-00 - உராய்வு

### 93 (*Aug.*) பிரிவு - *II*

ஆரம்பம்: 28 - 12 - 1991
[3-30 — 5-30]

ஆசிரியர்:
திரு. கிருஷ்ணா
(சி-1222)

## A/L 93

கலை, வர்த்தகம், விஞ்ஞானம்
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 28-12-91 (சனி)

### யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.
(சி/1157)

## 28 - 12 - 1991 (சனி)

பி. ப. — 1-30 — 2-30
MORPHOLOGY
உருவவியல்

ஆசிரியர்
ஐங்கரநேசன்
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.
(சி/1154)

## இதோ! வெளிவந்து வேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன

### சீவம் இண்டஸ்றீசாரின்

மாத படக் கலண்டர்கள்,
பொக்கற் கலண்டர்கள் (24 டிசைன்கள் அடங்கியது)

| | | |
|---|---|---|
| No. 1 பெரிய படக் கலண்டர் | 100 இன் விலை | - 1700/- |
| No. 2 மீடியம் கலண்டர் | " " " | - 1250/- |
| No. 3 சிறிய கலண்டர் | " " " | - 750/- |
| பொக்கற் கலண்டர் | " " " | - 125/- |

[சீனறீஸ், பூ, பிள்ளைகள், சினிமா, சுவாமிப் படங்கள் உள்ளடக்கியவை]

★ வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு:
எமது விநியோகம் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ளமையால் கீழ்க்கண்ட விலாசத்தில் இதே விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

மக்மிலன் புத்தகசாலை,
இல. 3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(19180)

## சிறுவர் பாடசாலை ஆசிரியைகள் இணைந்து நடத்தும்

### கலை விழா

மூளாய், சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தினரால் பயிற்றப்பட்ட சமாளை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சிறுவர் பாடசாலை ஆசிரியைகள் குழுக்களாக இணைந்து சிறுவர் கல்வியின் அவசியத்தையும், சிறுவர் கல்வியூடாக சமூக அபிவிருத்தியை எவ்வாறு செய்யலாம் என்பது பற்றியும் கலை விழா ஒன்று நடத்த உள்ளனர்.

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்

காலம்: 28-12-1991 பிற்பகல் 1 மணி- தொடக்கம் 5 மணி வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுவர் பாடசாலை - ஆசிரியர் பயிற்சி நிலையம்
மூளாய்.
(19174)

## புதிய ஆங்கில வகுப்புகள்

● *ESOL* [*London*]
★ செவ்வாய் / வியாழன் 4-30 — 6-00
★ சனி / ஞாயிறு 10-30 — 12-00
★ வியாழன் / வெள்ளி 2-30 — 4-00
(ஆரம்பம்: 02 01 - 1992)

● *TOEFL*
★ சனி / ஞாயிறு 8-00 — 10-00

● *FOLLOW-ME* [*London*]
*LEVEL* - I
[3 மாதப் பயிற்சி]
★ திங்கள் / புதன் 10-00 — 11-30
ஆரம்பம்: [01 - 01 - 1992]

● *LITERATURE*
★ சனி ஞாயிறு 3-00 — 5-00

விரிவுரைகள்:
கந்தையா நவரேந்திரன்.

### JAFFNA ENGLISH ACADEMY

9, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(சி-1159)

## 17 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



உதிர்வு: 10 - 12 - 1991

### திருமதி தெய்வானை முருகேசு

(வவுனி அப்பாச்சி)

அன்பின் சிகரமாய் — எம்
வாழ்வின் வழிகாட்டியாய் — வாழ்ந்திட்ட
எங்கள் ஒளி விளக்கின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (26 - 12 - 1991) எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண வைபவத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது குடும்பத்தின் சார்பிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

M. V. ஸ்ரீஸ்கந்தராஜா,
(இரத்தினம் C. T. B சாரதி)
குடும்பத்தினர்.

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(19178)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 22 — 03 — 1941

மறைவு: 26 — 11 — 1991

### அமரர் செல்லத்துரை கனகசபாபதி

[ஓட்டுநர், ஒட்டிசுட்டான்]

அன்பின் தலைவா! ஆசை மிகு சோதரா, இன்றோடு நீங்கள் மறைந்து ஒரு மாதமா? நம்பமுடியவில்லையே. மனைவியாய் இருந்து நான் மயங்கிப் புலம்பிடவும், ஒரு கொடியில் வந்த சோதரர்கள் தவித்திடவும், மைத்துனர்கள் சேர்ந்து அழுதிடவும், அன்னையின் அரவணைப்பிற்கு சென்றனையோ!

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்,

மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மாமா,
மாமி, மருமக்கள்,
உறவினர்கள்.

(19186)

## மரண அறிவித்தல்

### முதலியார் சுப்பையா பொன்னம்பலம்

சரசாலையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட முதலியார் சுப்பையா பொன்னம்பலம் [இளைப்பாறிய கொழும்பு உயர்நீதிமன்ற முதலியாரும், கொழும்பு தமிழ்ச் சங்க ஸ்தாபகரும்] காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், கதிர்காமநாதன் [இளைப்பாறிய கொத்தணி அதிபர், கொண்டாவில்], திருமதி இலைவசிலி விக்கினராசா, சிதம்பரநாதன் [இளைப்பாறிய யா / மாநகரசபை உத்தியோகத்தர்] லோகநாதன் [கட்டாரி], இராமநாதன் [இளைப்பாறிய யா / மாநகரசபை உத்தியோகத்தர்], இலங்கைநாதன் [கனடா], நல்லைநாதன் [யா / மாநகர சபை உத்தியோகத்தர்] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி சின்னம்மாவின் சகோதரரும், பொன்னுச்சாமி உடையாரின் மைத்துனரும், விக்கினராசா [இளைப்பாறிய யா / மாநகரசபை உத்தியோகத்தர்], சவுந்தரநாயகி, மங்கையர்க்கரசி, மனோகரி, பிரபாபதி, கனகாம்பிகை, சவுந்தரலெட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், பொன்னுச்சாமி, சண்முகநாதன், குணபூஷணம் சபாநாதனின் தாய்மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 20/5, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை இல்லத்திலிருந்து இன்று (26 - 12 - 91) காலை 11-00 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. கதிர்காமநாதன்.
20/5, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.
(19182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## காலத்தின் கோலமோ...?

உலக வரலாற்றின் காலச் சக்கரச் சுழற்சியில், கம்யூனிசம் தனது எழுபத்தி நான்காவது வயதில் காலமானது பல மாதங்களுக்கு முந்திய செய்தி.

கம்யூனிசத்தின் அசைக்க முடியாத பேரரசாக, உலக வல்லரசாக விளங்கிய சோவியத் யூனியன், துண்டு துண்டுகளானது முந்திய வரலாற்றுப் பரிணாமத்தின் விளைவு. சோவியத் யூனியனில் அங்கம் வகித்த 15 குடியரசுகளில் ஜோர்ஜியா தவிர்ந்த ஏனைய பதினான்கும் இப்போது தனித்தனி சுதந்திர நாடுகளாகப் பிரகடனமாகி விட்டன. அவற்றில் மிகப் பலவற்றை அமெரிக்கா உட்படப் பல உலக நாடுகள் அங்கீகரித்தும் விட்டன.

சோவியத் யூனியன் என்று இப்போது ஒன்றில்லை. அதன் தலைவர் அல்லது ஜனாதிபதி என்றும் எவருமிலர். சோவியத் யூனியன் குலைந்து, கலைந்து, அழிந்ததால் சோவியத்தின் கடைசி ஜனாதிபதியாக இருந்த திரு மிகயெயில் கோர்பச்சேவும் நேற்று தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

1985 ஆம் ஆண்டில் சோவியத் யூனியனின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோர்பச்சேவ், உலகத்தை அணு ஆயுத அழிவில் இருந்து காப்பாற்றுவதற்காகவும், உலக சமாதானத்துக்காகவும் உளத் தூய்மையோடு பணியாற்றியதை உலக வரலாறு ஒரு போதும் மறந்து விட முடியாது. அவரின் அந்த அரிய பணிக்காக, கெடுபிடி யுத்தம் ஒழிவதற்கு உழைத்ததற்காக அவருக்குச் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது தெரிந்ததே.

கோர்பச்சேவின் பணி உலக அரங்கில் பெரும் மகத்துவம் மிக்கதாகி, அவரது புகழ் ஓங்கிய அதே வேளை, உள்நாட்டில் அவரால் தனது நிலையைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. உலகத்துக்கு உத்தமனாகியவரால், உள்நாட்டில் திறமைசாலியாக மாற முடியவில்லை! மக்கள் சக்தியினால் அவர் அடித்து வீழ்த்தப்பட்டு விட்டார்.

திரு கோர்பச்சேவ் அமெரிக்காவுடன் செய்து கொண்ட அணு ஆயுதப் பரிகரண ஒப்பந்தங்கள் இப்போது செல்லுபடியாகாமற் போய்விட்டன என்றே கருதப்படவேண்டும். புதிய நாடுகள் முந்திய ஒப்பந்தங்களை ஏற்றுகொண்டு தமது கொள்கைத் திட்டங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் தனித்தனியாக மீளக் கைவெழுத்தி வேண்டும்.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த நாடுகள் உருவாக்கிய புதிய பொதுநலவாய அமைப்பின் தலைவர் யார் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை. உக்ரெயின் போன்ற அங்கத்துவ நாடுகளிடம் இருக்கும் அணு ஆயுதங்கள் மற்றும் அணு உலைகளைக் கையாளும் பொறுப்பு அவருக்கு வழங்கப்படுமா என்பது குறித்தும் இன்னும் தீர்மானமில்லை.

இந்நிலையில் அணு ஆயுத ஆபத்து மீண்டும் உலக மக்களைப் பயமுறுத்தும் ஒரு பயங்கர நிலை உருவெடுத்திருக்கிறது. உலக சமாதானம் குலைந்து போகக் கூடிய ஆபத்துத் தோன்றியுள்ளது.

சென்ற வருட இறுதியில், தொலைந்து போய்விட்டதாகக் கருதப்பட்ட அணு ஆயுத ஆபத்து ஓராண்டு காலத்தில் திரும்பி வந்து உலக மக்களைத் திருகுவதற்கு, நெருக்குவதற்கு, ஆயத்தமாகிறது. காலத்தின் கோலம் என்பது இவ்வாறு தான் இருக்குமோ...?

## மன்னார் ஆசிரியருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிச. 26

மன்னார் மாவட்ட ஆசிரியர்கள், கல்வி அலுவலக ஊழியர்கள் ஆகியோருக்கு 1988 ஆம், 1989 ஆம் ஆண்டுகளுக்குரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

மன்னார் கல்வி இணைக்கள அலுவலகத்தின் கணக்காளர் திரு. வை. குரூஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவை இதுவரைப் பெறாதவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

மன்னாரிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றவர்கள் யாழ். கல்வித் திணைக்களத்தின் அலுவலக கணக்காளரிடம் தமக்குரிய கொடுப்பனவைப் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார். [உ-த-3]

## இன்ரறக்ட் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிச. 26

சூழல், சுகாதார பாதுகாப்பு வாரத்தில் பங்களிப்பது சம்பந்தமான ஆராய்வதற்கான இன்ரறக்ட் கழக உறுப்பினர்களின் கலந்துரையாடல் இன்று காலை பத்து மணிக்கு நடைபெற உள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் சகல பாடசாலைகளின் இன்ரறக்ட் கழக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். றோட்டரிக் கழகச் செயலாளர் கேட்டுள்ளார். [அ]

## 'ஆதாரம்' குறித்து ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், டிச. 26

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின், சமூக பொருளாதார, விஞ்ஞான ஆய்வு இதழான "ஆதாரம்" சஞ்சிகை குறித்து நாளை மறுதினம் சனிக்கிழமை ஆய்வரங்கு ஒன்று நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்ச்சியில் இதுவரை வெளிவந்த "ஆதாரம்" இதழ்கள் பற்றிய மதிப்பீடும், இனிமேல் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும் ஆராயப்படும். பல துறைகளைச் சேர்ந்தவர்களும் இந்த ஆய்வரங்கில் கலந்து கொள்கின்றனர். [அ]

## அகதி முகாம் விபத்தில் 3 மாதக் குழந்தை காயம்

பலவயாக விழுந்தவனை மாதேடி மிகிப்பதுபோல, தங்களின் சொந்த ஊர்களில் இருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் இருப்போர் பல கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள்.

தொற்று நோய்கள், போஷாக்கின்மை போன்ற ஆபத்துக்கள் மட்டுமன்றி அகதி முகாம்களில் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

யாழ். வேம்படி கல்லூரி அகதி முகாமில் நேற்று முன்தினம் நடந்த விபத்து ஒன்றில் மூன்று மாத ஆண் குழந்தை ஒன்று தீப்புண்ணுக்கு ஆளானது.

அகதிகளில் ஒருவர் பாத்திரம் ஒன்றில் சுடுதண்ணீர் எடுத்துச் சென்ற வேளை, இன்னொருவருடன் தட்டுப்பட்டதால் சுடுதண்ணீர் பாத்திரம் கீழே படுத்திருந்த மூன்று மாதக் குழந்தை மீது விழுந்தது. அதனால் குழந்தையின் உடல் முழுவதும் வெந்து போயிற்று.

நெடுந்தீவைச் சேர்ந்த தனுஷ்கோடி தம்பதிகளின் வசீகரன் என்ற குழந்தையே இப்படிக் காயமடைந்தது. இக்குழந்தை இப்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திருமதி தனுஷ்கோடி இக்குழந்தையை புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் பிரசவித்திருந்த வேளை, அப்பகுதியில் இராணுவம் புகுந்ததால் அவர்கள் அகதிகளாக வந்து யாழ். வேம்படியில் தங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. [அ-15]

## செஞ்சிலுவை செய்தி அறிக்கை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் "செய்தி அறிக்கை" வெளியீட்டு விழா, இன்று பி. ப. 2.00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும்.

விழாவுக்கு செஞ். சங். யாழ். கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி கி. எஸ். நச்சினார்க்கினியன் தலைமை வகிப்பார். கிளையின் முன்னாள் தலைவர் வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (அ-15)

## பாப்பரசரின் நத்தார் செய்தி

உலகின் பல பாகங்களிலும் வாழும் மக்கள் நிறைந்த இன்னல்களை அனுபவிக்கிறார்கள். அவர்களின் இன்னல்கள் நீக்கப்பட வேண்டும். இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி இல்லாமற் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது ஜோன்பால் ஆண்டவர் தமது நத்தார் செய்தியில் தெரிவித்தார்.

வத்திக்கானில் ... மக்களுக்கு நத்தார் ... போது ... வார்.

## போதியளவு மருந்துகள் எமக்கு வந்து சேரவில்லை

### சுகாதாரப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச. 26

"யாழ். மாவட்ட வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் போதியளவு இங்கு வந்து சேரவில்லை. இதனால் மருந்துப் பற்றாக்குறை பெரிய அளவில் நிலவுகிறது."

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். சண்முகநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது பற்றித் தெரிவிக்கையில்;

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான மருந்து வகைகள் அந்த அந்த நிறுவனங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் பட்டியல் தயார் செய்யப்பட்டு சுகாதார அமைச்சுக்கு எம்மால் அனுப்பப்படுகின்றன.

இந்தப் பட்டியலின்படி மருந்து வகைகளை நான்கு சந்தர்ப்பமாகப் பிரித்து அனுப்புவது வழக்கம். ஆனால் இந்த வருடத்துக்கு என அனுப்பப்பட்ட மருந்து வகைகளைக் கணக்கெடுத்த போது குறைந்த அளவு மருந்து வகைகளே வந்து சேர்ந்துள்ளமை தெரிய வந்துள்ளது என்று கூறினார். (த-3)

### யாழ். ஆஸ்பத்திரியில் தற்சமயம்

## அவசர சத்திர சிகிச்சை மட்டுமே நடக்கிறது

யாழ். ஆஸ்பத்திரியில் மின் விநியோக சீர்கேடு காரணமாக அவசர சத்திர சிகிச்சைகள் மட்டுமே தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். ஆஸ்பத்திரியில் இயங்கிய மூன்று ஜெனரேட்டர்களும் பழுதடைந்துவிட்டன. அதை அடுத்து மாற்று ஏற்பாடாக, சிறிய ஜெனரேட்டர் ஒன்றின் மூலம் மின்சாரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தற்போது வழங்கப்படுகிறது.

இதனால் அவசர சத்திர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதேசமயம், நீர் விநியோகம், மலசல கழிவு நீர் வெளியேற்றம் போன்ற வேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## நோயாளர் கப்பல் சேவை மீண்டும் மாத ஆரம்பத்தில்

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ். மாவட்டத்திலிருந்து அவசர நோயாளர்களை கொழும்புக்கு ஏற்றிச் செல்லும் கப்பல் சேவை அடுத்த மாத முதல் வாரத்தில் இருந்து மீண்டும் ஆரம்பமாக இருக்கிறது.

கடந்த சில வாரங்களாக தடைப்பட்டிருந்த இந்தச் சேவையை மீண்டும் தொடர்வதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

எதிர்வரும் முதலாம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் 'குமண' கப்பலில் பொருட்கள் இறக்கப்பட்ட பின்னர் நோயாளர்கள் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும்—

அதன்பின்னர் கொழும்பில் உள்ள நோயாளர்கள் கப்பலில் அழைத்து வரப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தீவிரவாதிகளை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்

### ராவ் - ஜெயலலிதாவுக்கு உறுதி

புதுடில்லி, டிச. 26

தமிழ் நாட்டிலும் மற்றும் இந்தியாவின் ஏனைய பகுதிகளிலுமுள்ள இலங்கைத் தீவிரவாதிகளை வெளியேற்ற இந்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்று இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடம் உறுதியளித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

நேற்று முன்தினம் செல்வி ஜெயலலிதா இந்தியப் பிரதமரை புதுடில்லியில் சந்தித்து காவிரி நீர்ப்பிரச்சினை மற்றும் இலங்கைத் தீவிரவாதிகள் பிரச்சினை பற்றிப் பேசியபோதே அவரிடம் இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது.

## அஜித்சிங் நீக்கப்படலாம்

புதுடில்லி, டிச. 26

ஜனதா தளம் கட்சியில் இருந்து அதன் முக்கிய தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான அஜித்சிங்கை எந்த நேரமும் இடைநிறுத்தி வைக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக விளக்கம் கேட்டு அவருக்கு கட்சித் தலைவர் எஸ். ஆர். பொம்மை அளித்த காலக்கெடு கடந்த திங்கட்கிழமையுடன் முடிவடைந்து விட்டது.

திரு அஜித்சிங், இக்காலக்கெடுவினுள் தனது விளக்கத்தை அளிக்கத் தவறிவிட்டார் என்று புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## படையினர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் தாக்குதலை அடுத்து முல்லைத்தீவு (மணலாறு) பகுதிகளில் நடைபெற்ற மேற்கொண்டதில் இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்துவிட்டதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர் என்று அச் செய்தியில் கூறப்பட்டது.

எனினும்—

மணலாறில் தொடர்ந்து நேற்றும் விமானக் குண்டுவீச்சு இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மீது நேற்று இரண்டு இடங்களில் ஸ்ரீலங்காப் படைகள் தாக்குதல் நடத்தின என்று கூட்டுப்படைத் தலைமை அலுவலகத் தகவல்களை மேற்கோள் காட்டி இலங்கை வானொலியும் அறிவித்தது. (உ-எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பொன்னம்மா

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் வசித்தவருமாகிய கந்தையா பொன்னம்மா 25-12-1991 அன்று காலமாகிவிட்டார். அன்னார் பெரியதம்பி கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், தமயேஸ்வரன், காலஞ்சென்ற பத்மநாதன், சபாரெத்தினம், குலசேகரம், கிருபானந்தன் (சுவிஸ்), சண்முகசுந்தரம் (கனடா), லீலாவதி, இலகவதி, புனிதவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், வே. தம்பிராசா, செ. மகாலிங்கம், ந. மகாலிங்கம், யோகாம்பிகை, நவமணி, காலஞ்சென்ற பத்மாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26-12-91) காலை 10 மணியளவில் சுன்னாகம் சொத்தியாலடி மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகொள்கின்றோம்.

தகவல்:
க. சபாரத்தினம்,
க. குலசேகரம்.

ஸ்ரேசன் அருகாமை,
சுன்னாகம்.

[19184]

## திருமதி முத்தையா தெய்வானைப்பிள்ளை

காரைநகர் இடைப்பிட்டி மில் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி முத்தையா தெய்வானைப்பிள்ளை புதனன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் சுப்பிரமணியம் முத்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் (மலேசியா), சிவப்பிரகாசம் (மலேசியா), இராசநாயகம் (மலேசியா), மற்றும் திருமதி பரஞ்சோதி, திரு. நடராசா (பொறியியலாளர் லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய முன்னைநாள் அதிபர் திரு. ஆ. நடராசா, திருமதி தங்கமணி (மலேசியா), திருமதி மகேஸ்வரிக்கரசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னார் ஈமக்கிரியைகள் ஆனைக்கோட்டை ஆடி கொக்குவில் வீதியிலுள்ள இளையதம்பி அவர்களின் இல்லத்தில் இன்று (26-12-1991) வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சரஸ்வதி பாலசிங்கம்.
(மருமகள்)

ஆடி, கொக்குவில் வீதி,
ஆனைக்கோட்டை.

(19189)

## திருமதி தாமோதரம்பிள்ளை சிவபாக்கியம்
(நவாலி)

காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (மலாயன் பென்சனியர்)யின் அன்பு மனைவி சிவபாக்கியம் (25-12-1991) சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சந்திரராசா, பவதி (ராணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. S பரமநாதன், சிவபாக்கியம் (ஜெயமதி) ஆகியோரின் அன்பு மாமியும், கணேசமூர்த்தி, மங்களமூர்த்தி, சூரியமூர்த்தி, சந்திராதேவி, ஜெயமூர்த்தி ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-12-1991 இன்று வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. மங்களமூர்த்தி

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

[19187]

## வேலுப்பிள்ளை கந்தசாமி

காரைநகர் சுருவிலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமி 24-12-91 செவ்வாய்க்கிழமை இரவு காலமாகிவிட்டார். அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், கமலாதேவி, அருளானந்தசிவம் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), நந்தகுமார், செல்வமணி (ஆசிரியை, பலாலி ஆசிரியர் கலாசாலை 1ஆம் வருடம், கணிதம்), சரஸ்வதி, கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குமாரசாமி, தர்ரணி, ஐசுவரியராணி, பேரம்பலம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 176, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் 26-12-91 வியாழக்கிழமை காலை 8-30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. அருளானந்தசிவம்
(ஆசிரியர், யாழ். இந்து)

176, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/1163]

# படை குவிப்பு

பங்களாதேஷ் எல்லைக்கு பெருமளவு துருப்புக்களை மியான்மார் (பர்மா) அரசு அனுப்பி வைத்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷ் தனது எல்லையில் பற்றோசபல்லை அதிகரிக்கப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்தும், மற்றும் பங்களாதேஷில் பர்மிய முஸ்லிம்கள் இராணுவ முகாம்களை அமைப்பதாகக் கூறப்படுவதாலுமே இந்தப் படைக்குவிப்பு இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# கடலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நிலையங்களில் தோற்றிய பரீட்சார்த்திகளின் ஒரே பாடத்திற்கான விடைத்தாள்களே நீரில் மூழ்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

விடைத்தாள்களை கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்காகச் சென்ற திணைக்கள அதிகாரிகள், விடைத்தாள்களுடன் கொழும்புக்குச் சென்று விட்டனர்—

எத்தனை பரீட்சார்த்திகளின் விடைத்தாள்கள் நீரில் வீழ்ந்தன என்பது குறித்தோ, அவை முற்றாகப் பழுதடைந்தனவா என்பது பற்றியோ தகவல் பெறமுடியவில்லை.

இதேவேளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்குக் கொண்டுவரப்பட்ட பத்திரிகைப் பொதி ஒன்றும் கடலில் தவறி விழுந்ததாக அறிய வந்தது.

# நகரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கள், வீதிகள் தூய்மைப்படுத்தும் பணிகள் இடம்பெற்றன.

சனசமூக நிலையங்களும் அவ்வப்பகுதி கிராமவாசிகளும் மக்களும் இணைந்து இந்தப் பணியைச் செய்தனர்.

யாழ். ஆஸ்பத்திரி வளவுச் சுற்றாடல் பகுதியும் புல் செருக்கி துப்புரவு செய்யப்பட்டது. தமிழீழ காவல் துறையைச் சேர்ந்த சுமார் 50 பேர் இப்பணியினை மேற்கொண்டனர். போதனா வைத்தியசாலை ஊழியர்களும் இப்பணியில் பங்கு கொண்டனர். (ஒ-5-15)

# இந்திய-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தமிழர் பிரச்சினை பற்றியோ எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரஸ் கட்சியும் தான் விடுதலைப் புலிகளை ஆதரித்து வந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

மாநாட்டில் நிறைவேற்றிய 15 தீர்மானங்களில் இலங்கைத் தமிழரின் போராட்டம் பற்றியோ அல்லது விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பற்றியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. திராவிட இயக்கத்தின் முன்னைய மாநாடுகளை விட இது வேறுபட்டதாகவே இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த)

# 'கோர்பி'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
னார்.

எனினும் சோவியத் மக்களிடம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, அவர்களின் ஆணையைப் பெறாமல் சோவியத் யூனியன் என்ற அமைப்பைக் கலைப்பதை தாம் விரும்பவில்லை என்றார் அவர்.

இதேசமயம், திரு. கோர்பச்சேவின் இராஜினாமாவை அடுத்து, சோவியத் அணு ஆயுதங்கள் அனைத்தும் ரஷ்ய குடியரசின் ஜனாதிபதி [illegible] [illegible] (ஏ.-6)

# மணலாறில்...

பொதுமக்களின் வீடுகள் பலவும், உடைமைகள் பலவும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொக்குத்தொடுவாய் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய அதிரடித் தாக்குதலினால் ஸ்ரீலங்காப் படையினர் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிதம்பரப்பிள்ளை தெய்வானை

காரைநகர் பலகாடைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். நாவன்மார் வீதியில் வசித்தவருமாகிய திருமதி சிதம்பரப்பிள்ளை தெய்வானை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, செல்வமுத்து, காலஞ்சென்ற அம்பலவாணர், பரஞ்சோதி, அருணாசலம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகசபை, காலஞ்சென்ற பரமசாமி, சிவசோதி, பத்மாவதி, புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26-12-91 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பரஞ்சோதி

45/8, நாவன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (18980)

## தம்பாபிள்ளை நன்னித்தம்பி
[பொன்னுத்துரை]

திருநெல்வேலி பாரதசாலை வீதியைச் சேர்ந்த தம்பாபிள்ளை நன்னித்தம்பி (பொன்னுத்துரை) நேற்று (25-12-91) காலமானார்.

இவர் அன்னப்பாவின் அன்புக் கணவரும், பரமசிவம் (காப்புறுதிக் கூட்டுத்தாபனம், வவுனியா), ஸ்ரீதரன் (Geologist, மகாவலி அபிவிருத்திச் சபை), பரமேஸ்வரி ஆகியோரின் தந்தையும், மாணிக்கவல்லி, சி. அமரேசன் (ஆசிரியர், செங்குந்தா இந்துக் கல்லூரி - இவர் வேலணை பிரபல வர்த்தகர் அமரர் M. S. சிற்றம்பலம் (முருகா) அவர்களின் மகன்), இந்திரா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற மயில்வாகனம் துரையப்பா, இராமப்பிள்ளை செல்லப்பா, மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சௌபாக்கியவதி, வள்ளியம்மை, நல்லதம்பி, பொன்னப்பா ஆகியோரின் மைத்துனரும், அமலன், உமா, ஸ்ரீஸ்கந்தா, ஸ்ரீஸ்ரராம், ஸ்ரீசிவகாமி, நிட்டல்குமார், சத்தியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 'பரமந்தான்' திருநெல்வேலி இல்லத்தில் இன்று (26-12-91) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 11-00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. அமரேசன்
(மருமகன்)

பாரதசாலை வீதி,
திருநெல்வேலி. (19188)

## திருமதி அமுதம்மா சோமசுந்தரம்

திருமதி அமுதம்மா சோமசுந்தரம் காலமானார். இவர் காலஞ்சென்ற சோமசுந்தரம் (விதானையார்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி பராசக்தி பொன்னையாவின் சகோதரியும், திருமதி தனலட்சுமி அரசகுலசிங்கம், காலஞ்சென்ற திருமதி விசாலட்சுமி குமாரசாமி (மலேசியா) ஆகியோரின் இளைய தாயாரும், சுதந்திரன் சரோஜினிதேவி, புவேந்திரன் பத்மினி, பாஸ்கரன் மாலினி, அரசகுலதேவி மகேந்திரம், சிவசோமசுந்தரி யோகராஜன் (மலேசியா), யோகேஸ்வரிதேவி சிறிஸ்கந்தராசா (ஜேர்மனி), சத்தியதேவி மகேந்திரன் (ஜேர்மனி), புஸ்பசாந்தி குணதாஸ், இந்திராதேவி (மலேசியா) ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று (26-12-91) முற்பகல் 11 மணிக்கு பிப்பிலி மயானத்தில் நடைபெறும்.

டச் ரோட்,
சண்டிலிப்பாய்.

தகவல்:
அரசகுலசிங்கம்
(மருமகன்)

[19376]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட் க்காக, யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் அச்சிடப்பட்டு 26-12-1991 இல் அவர்களால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org